உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936


வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 12.07.2026 • மலர் 04 • இதழ்: 193 • ஞாயிற்றுக்கிழமை • Edition : Nagercoil • 12.07.2026 • Vol : 04 • Issue : 193 • Page : 4 • Rs. 5/-

# வியட்நாம் படகு விபத்தில் இந்தியர்கள் பலி

## பிரதமர் மோடி இரங்கல்



டெல்லி, ஜூலை 12

ஆசியாவில் தென்சீன கடல் பகுதியில் அமைந்துள்ள நாடு வியட்நாம். இந்நாட்டில் பல்வேறு தீவுகள், சுற்றுலா தலங்கள் உள்ளன. இந்த சுற்றுலா தலங்களுக்கு இந்தியா உள்பட உலகின் பல்வேறு நாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்நிலையில், இந்தியாவை சேர்ந்த 32 சுற்றுலா பயணிகள் உள்பட 36 பேர் இன்று காலை புகுவாக் தீவுக்கு படகில் சுற்றுலா மேற்கொண்டுள்ளனர்.

நடுக்கடலில் பயணம் செய்தபோது மோசமான வானிலை காரணமாக படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணம் செய்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்துள்ளனர். தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர் 18 பேரை மீட்டனர். ஆனாலும், இந்த விபத்தில் இந்தியாவை சேர்ந்த சுற்றுலா பயணிகள் 15 பேர் உயிரிழந்தனர். இதில் 8 பேர்தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

இந்நிலையில், வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த இந்தியர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

வியட்நாம் படகு விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்த செய்தி கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

படகு விபத்தில் உயிரிழந்தவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது இரங்கலை தெரிவித்து கொள்கிறேன். விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையபிரார்த்திக்கிறேன். இந்த விபத்து தொடர்பாக தேவையான உதவிகளை இந்திய தூதரகம் வழங்கும். இந்திய அதிகாரிகள் வியட்நாம் அதிகாரிகளுடன்தொடர்பில் உள்ளனர்

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாரியூர் அரசு பள்ளியில் புதிய நூலகம் திறப்பு விழா

### வக்கீல் ஜெபில் வில்சன் திறந்து வைத்தார்



கன்னியாகுமரி ஜூலை 12

குமரி மாவட்டம் அஞ்சுகிராமம் பேரூராட்சிக்கு உட்பட்ட வாரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிய நூலகம் திறப்பு விழா மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் 3 லட்சம் மதிப்பிலான டெஸ்க், பெஞ்ச், கண்காணிப்பு கேமரா வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு அஞ்சுகிராமம் பேரூராட்சி மன்ற தலைவர் ஜானகி இளங்கோ தலைமை தாங்கினார். பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மேட்டுக்குடி முருகன், செயலாளர் வாரியூர் மணிகண்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தலைமை ஆசிரியர் பிஸ்ஷி. பி.றேனி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக அகஸ்தீஸ்வரம் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளரும், தொழிலதிபருமான ஜெஸீம், கவுன்சிலர்கள் வீடியோகுமார், ஜோஸ்திவாகர் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

சிறப்பு விருந்தினராக ஜாண்ஸ் சென்ட்ரல் பள்ளி மற்றும் புனித ஸ்டெல்லாஸ் மேல்நிலைப்பள்ளி தாளாளர் வக்கீல் ஜெபில் வில்சன் கலந்து கொண்டு தனது சொந்த நிதியில் கட்டி வழங்கிய நூலகத்தை திறந்து வைத்து பேசினார். அவர் பேசியதாவது: இது போன்ற பள்ளி நிகழ்வுகளில் கலந்து கொள்வது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியை தருகிறது. காரணம் ஒரு மனிதனுடைய மகிழ்ச்சி என்பது இளமையான இந்த பள்ளி பருவமாகும்.

இந்த அரசு பள்ளியானது தற்போது தனியார் பள்ளிகளுக்கு இணையாக விளங்கி வருகிறது. இதற்கு உறுதுணையாக இருந்த பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மேட்டுக்குடி முருகன், செயலாளர் வாரியூர் மணிகண்டன் ஆகியோருக்கும் அதற்கு மிகவும் உறுதுணையாக இருந்து வரும் ஜவஹர் ஸ்டோர் உரிமையாளர் தொழிலதிபர் ஜெஸீம், கவுன்சிலர்கள் வீடியோகுமார், ஜோஸ்திவாகர் ஆகியோரை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

மேலும் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு அவ்வப்போது பல்வேறு பரிசுகளை வழங்கி பாராட்டி கௌரவிக்க வேண்டும். அப்போது தான் அவர்களது ஆர்வம் மற்றும் திறமை ஆகியவை வெளிப்படும். நான் மாணவர்களின் வளர்ச்சிக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்து தருவேன் என இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அரசாங்கம் பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. எனவே ஒவ்வொரு மாணவர்களும் தங்களின் பொறுப்பை உணர்ந்து நன்றாக படித்து மருத்துவத்துறை, பொறியியல் துறை, காவல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கி படித்த பள்ளிக்கும், பிறந்த ஊருக்கும், பெற்றோருக்கும், கற்று தந்த ஆசிரியர்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என உங்களை நான் மனதார பாராட்டுகிறேன். இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் சுமார் 3 லட்சம் மதிப்புள்ள டெஸ்க், பெஞ்சு மற்றும் கண்காணிப்பு கேமராக்களை பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகதலைவர் மேட்டுக்குடி முருகன், செயலாளர் வாரியூர் மணிகண்டன் ஆகியோர் பள்ளிக்கு வழங்கினர். நிகழ்ச்சிகளை ஆசிரியர் தீபா தொகுத்து வழங்கினார். ஆசிரியை லதா நன்றி கூறினார். நிகழ்ச்சியில் இருபால் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

போட்டோ புட் நோட்

வாரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் சுமார் ரூபாய் 3 லட்சம் மதிப்பிலான டெஸ்க், பெஞ்சு மற்றும் கண்காணிப்பு கேமரா வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் பல்வேறு விளையாட்டுகளில் சிறந்து விளங்கும் பள்ளி மாணவ, மாணவியர்களுடன் காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் .ச.கந்தசாமி கலந்துரையாடினார். உடன் முதன்மைக்கல்வி அலுவலர் முனைவர் இ.மான்விழி உட்பட பலர் உள்ளனர்.

### குழித்துறை அரசு மருத்துவமனையில்

## பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணிப் பெண்கள் விதிமுறைகளை மீறி பல மணி நேரம் அலைக்கழிக்கப்படும் அவலம்

### மாவட்டம் நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?

மார்த்தாண்டம், ஜூலை.12

குழித்துறை அரசு மருத்துவமனையில் மாதாந்திர பரிசோதனைக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்களை டாக்டர்களின் ஈகோ பிரச்சனையால் பல மணி நேரம் அலக்கழிக்கப்படுவதாக பரபரப்பு புகார் எழுந்துள்ளது. இது தொடர்பாக மாவட்ட நிர்வாகம் மற்றும் துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

குமரி மாவட்டத்தில் சுகாதார துறையின் மக்கள் நல் வாழ்வுத்துறைஇயக்குநகரத்தின்கீழ்மாவட்டதலைமை மருத்துவமனை உட்பட 9 அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகள், ஸ்கேன் சென்டர்கள் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதில் மகப்பேறு சிகிட்சைக்காக தக்கலை, பூதப்பாண்டி, குழித்துறை, ஆசாரிப்பள்ளம் போன்ற மருத்துவமனைகளில் சிறப்பு பிரிவுகள் செயல்பட்டு வருகிறது. இதில் ஒவ்வொரு மருத்துவமனைகளிலும் நூற்றுக்கணக்கான பெண்கள் பிரசவத்திற்கு இலவச சிசிட்சைக்காக வந்து செல்கின்றனர்.

குமரி மாவட்ட அரசு மருத்துவமனைகளில் பிரசவத்திற்கு அதிக அளவில் பெண்கள் வந்து செல்வது வழக்கமாக உள்ளது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக குமரி மேற்கு மாவட்ட பகுதியான குழித்துறை அரசு மருத்துவமனையில் 2 மகப்பேறு மருத்துவர்களின் ஈகோ பிரச்சனை காரணமாக புற நோயாளிகள் பிரிவில் கர்ப்பிணி பெண்களுக்கு பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு வருவதாக புகார்கள் எழுந்துள்ளன.

இதில் குறிப்பாக மாதாந்திர பரிசோதனைக்காக வரும் கர்ப்பிணி பெண்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர் என்பது நிதர்சனமான உண்மை. இந்த மருத்துவமனையில் கிள்ளியூர், விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட நோயாளிகள் அதிக அளவில் பயன் பெறுகின்றனர். குறிப்பாக மலையோர கிராமங்களான ஆறுகாணி, பத்துகாணி உள்ளிட்ட பல கிராம மக்கள், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட நீரோடி, தூத்தூர், வள்ளவிளை, தேங்காப்பட்டணம் போன்ற கடலோர கிராம மக்கள் மற்றும் அனைத்து தரப்பு மக்களும் அதிக அளவில் வந்து சிகிச்சை பெறுவது வழக்கம்.

குழித்துறை அரசு மருத்துவமனையில் தற்போது 24 மருத்துவர்கள், 48 செவிலியர்கள், 32 மருத்துவமனை பணியாளர்கள், 2 ஆய்வக நடத்துனர்கள், ஒரு கதிர்வீச்சு நுட்பனர் மற்றும் அலுவலக பணியாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இங்கு பணிபுரிகின்றனர். இந்த மருத்துவமனையில் கர்ப்பிணி பெண்களுக்கு மட்டும் 5மகப்பேறுமருத்துவர்கள்,பச்சிளம்குழந்தைகளுக்கான 4 மருத்துவர்கள் பணி புரிகின்றனர்.

மேலும் இங்குள்ள மருத்துவர்கள் சிலர் தனியாக மருத்துவமனைகள் நடத்துவதாகவும் புகார் உள்ளது. மேலும் சில டாக்டர்கள் தனியார் மருத்துவமனைகளில் பார்வையாளர் பிரிவு சிகிட்சைக்கு செல்வதும் வழக்கமாக உள்ளது. விளவங்கோடு, கிள்ளியூர் தொகுதி அரசுமருத்துவமனைகளில்வாரம்தோறும்புதன்கிழமை மட்டும் குழந்தைகளுக்கான தடுப்பூசி போடப்படுவது வழக்கம். ஆனால் குழித்துறை அரசு மருத்துவமனையில் 3 நாட்கள் குழந்தைகளுக்கான தடுப்பூசி செலுத்தப்படுகிறது. இந்த தடுப்பூசி காலை 8 மணி முதல் 12:00 மணிக்குள் போட வேண்டும். ஆனால் சில மருத்துவர்கள் அலட்சியத்தால் மதியம் 2 மணி வரை தாமதமாக தடுப்பூசி போடும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.இதனால் தாய்மார்கள் காலையிலே வந்து அமர்ந்து குழந்தைகளுடன் அவதிப்படுகின்றனர். பல தாய்மார்கள் காலையிலிருந்து தண்ணீரை குடிக்க முடியாமல் அவதிப்பட்டு வருகின்றனர். ஆகவே மாவட்ட ஆட்சியர் மற்றும் சுகாதார துறை அலுவலர் ஆகியோர் தனிக்கவனம் செலுத்தி, குழித்துறை அரசு மருத்துவமனை அவலங்களுக்கு காரணமான டாக்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை எழுந்துள்ளது. மேலும் அரசு மருத்துவமனைகளில் காலை மட்டுமின்றி, பிற்பகல் 3 முதல் 5 மணி வரை கர்ப்பிணிப் பெண்களுக்கான புற நோயாளிகள் பிரிவு செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பாப்பிரெட்டிப்பட்டியில்

## வீ லீடர் அமைப்பு சார்பில் போதையில்லா விழிப்புணர்வு பேரணி மற்றும் கருத்தரங்கம்



தருமபுரி ஜூலை 12

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டியில் அண்ணாமலை துவக்கியுள்ள "We The Leaders" அமைப்பு சார்பில் போதை இல்லா தருமபுரி மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி டெல்லி பழனிவேல் தலைமையில் நடைபெற்றது.

இந்த பேரணிக்கு சிறப்பு அழைப்பாளராக கரு. நாகராஜன் கலந்துகொண்டு பேரணியை துவக்கி வைத்தார். பாப்பிரெட்டிப்பட்டியில் ஸ்டான்லி பள்ளி அருகில் இருந்து துவங்கிய பேரணி பேருந்து நிலையம் வரை நடைபெற்ற பேரணியில் போதை ஒழிப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு கோசங்கள் எழுப்பியும், துண்டு பிரசுரங்கள் கொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதைதொடர்து சாமியாபுரம்கூட்ரோட்டுதனியார்மண்டபத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பேரணியில் தமிழ் மணி, வேலுமணி, சிவகுமார், ஒருங்கிணைப்பாளர்கள் சாய்சத்யன் ,ராஜா, கிருஷ்ணாசாய், ,சிமோன் கிறிஸ்டி, ,கார்த்திக்,பிரபு , கடத்தூர் குமார், சுக்ரி,சத்திவேல்,மணி கல்பனா, வடபழனி ராஜா,சிவன்,ராம் உள்ளிட்ட ஏராலமானோர் கலந்துகொண்டு போதை இல்லா தருமபுரி மாவட்டத்தை உருவாக்க வேண்டும் என வலியுறுத்தி உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

## ஓசூருக்கு வருகை தரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரை சிறப்பாக வரவேற்பு கொடுக்க காங்கிரஸ் கட்சியினர் ஒன்றுனைந்து வரவேண்டும்

### மாவட்ட தலைவர் அழைப்பு



கிருஷ்ணகிரி, ஜூலை 12

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூருக்கு வருகைத்தரும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் எம்,பிக்கு சிறப்பானவரவேற்ப்பு கொடுக்க காங்கிரஸ் கட்சியினர் ஒன்றுனைந்து வரவேண்டும் மாவட்ட தலைவர் எம்.சி, ரகுஅழைப்புவிடுத்துள்ளார் இது தொடர்பாக எம், சி, ரகு வெளியிட்டுள்ளசெய்தி குறிப்பில் தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் முதல் முறையாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் நகருக்கு வருகை தந் து

நீட் தேர்வால் மன உளைச்சலில் தற்கொலை செய்து கொண்ட மாணவர் வெற்றியானந்தனின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறவும் நீட் தேர்வின் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களின் அவல நிலை எப்படி தடுப்பது என்பது குறித்தும் எடுத்துரைக்க ஒசூர் மாநகரத்திற்கு ஜுலை 12ம் தேதி ஞாயிற்றுக்கிழமை சுமார் 4 மணி அளவில் வர உள்ளார்.

ஆகையால் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் அனைவரும் சுமார் இரண்டு மணி அளவில் நமது கிழக்கு மாவட்ட அலுவலகமான காமராஜர் பவன் அருகில் ஒன்றிணைந்து சுமார் இரண்டு மணிக்கு ஓசூரை நோக்கி செல்வோம், அகையால் அனைத்து காங்கிரஸ் நிர்வாகிகளும் தவறாமல் சரியான நேரத்தில் ஒன்று கூடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன் என்று எம்,சி,ரகு தெரிவித்துள்ளார்

# ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துமனை கதீட்டர் வழி சிகிச்சையில் உலக சாதனை




சென்னை, ஜூலை 12

ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை, பழுதடைந்த இரண்டு இதய வால்வுகளுக்கு மீண்டும் ஒரு திறந்தநிலை இதய அறுவை சிகிச்சை இன்றி வெற்றிகரமாக சிகிச்சையளித்து சாதனை படைத்துள்ளது. பெருந்தமனி வால்வு நோய்க்காக செய்யப்பட்ட திறந்தநிலை அறுவை சிகிச்சைக்குப் பிறகு, உலகிலேயே முதல்முறையாக முழுமையாக கதீட்டர் வழியில் மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை இதுவெனக் கருதப்படுகிறது.

ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்கு முன்பு சிக்கலான இதய வால்வு அறுவை சிகிச்சை செய்துகொண்ட 58 வயது நபருக்கு இந்த நவீன சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. மருத்துவத் துறையில் இதுவரை இது போன்றதொரு சிகிச்சை பதிவு செய்யப்படாததால், சிகிச்சையைத் தொடங்குவதற்கு முன்பு, ட்ரான்ஸ்கதீட்டர் ஹார்ட் வால்வ் தெரபிஸ் பிரிவின் இயக்குநர் டாக்டர் ராஜாராம் அனந்தராமன் தலைமையிலான மருத்துவக் குழுவும், சர்வதேச வல்லுநர்கள் குழுவும் இச்சிகிச்சை முறையை விரிவாக ஆய்வு செய்தன. இதுகுறித்து டாக்டர் ராஜாராம் அனந்தராமன் கூறியதாவது:

"ராஸ் சிகிச்சைக்குப் பிறகு அயோர்டிக் மற்றும் பல்மனரி ஆகிய இரண்டு வால்வுகளும் பழுதடைந்தால், அதற்கான சிகிச்சைத் தேர்வுகள் மிகவும் குறைவு. ஏனெனில், மீண்டும் ஒரு திறந்தநிலை அறுவை சிகிச்சை செய்வது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். துல்லியமான ஸ்கேனிங், மிகச் சரியான திட்டமிடல் மற்றும் பல்வேறு மருத்துவப் பிரிவுகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின் மூலமாகவே, மார்பைத் திறக்காமல் கதீட்டர் முறையிலேயே பழுதடைந்த இரண்டு வால்வுகளையும் எங்களால் வெற்றிகரமாக மாற்ற முடிந்தது. எங்கள் அறிவுக்கு எட்டியவரை, உலக மருத்துவ வரலாற்றில் முழுமையாக கதீட்டர் மூலம் 'டபுள் ட்ரான்ஸ்கதீட்டர் ராஸ் ரெஸ்க்யூ' சிகிச்சை செய்யப்பட்டிருப்பது இதுவே முதல் முறையாகும். வேறு வழியின்றி தவிக்கும் அதிக ஆபத்துள்ள நோயாளிகளை கவனமாகத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு மாற்று வழியில் மறுவாழ்வு அளிக்கும் சாத்தியக்கூறுகளை இந்த வெற்றிகரமான சிகிச்சை வெளிப்படுத்தியிருக்கிறது."

என்று தெரிவித்தார்.

# தமிழக முதல்வர் விஜய் உருவப்படத்தை " ரூபிக்ஸ் கியூப் மோசைக் " கில் உருவாக்கி உலக சாதனை



சென்னையில் உள்ள ஸ்கை ஒன் மாலில், 30 திறமையான மாணவர்கள் இணைந்து 10,000 ரூபிக்ஸ் கியூப்களை பயன்படுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜயின் உலகின் மிகப்பெரிய "உருவப்படத்தை உருவாக்கி உலகசாதனையை நிகழ்த்தினர்.

இந்த உலக சாதனை நிகழ்ச்சி அகில இந்திய விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு செயல்பாடுகள் கழகம் சார்பில்,அகிலஇந்தியகியூப்கூட்டமைப்பு அமைப்பின் தலைவர் ஆர். பிந்து பிரியங்கா தலைமையில் நடைபெற்றது.

இந்த உருவப்படம் அதன் கலைநயம், துல்லியம் மற்றும் தரத்திற்காக பொதுமக்கள், பெற்றோர், ஊடகங்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் பாராட்டைப் பெற்றது. இந்த நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் பி.வெங்கடராமணன்கலந்துகொண்டு மாணவர்களின் அர்ப்பணிப்பு, ஒழுக்கம் மற்றும் குழு ஒத்துழைப்பைப் பாராட்டினார். மேலும், உலகச் சாதனையை நிகழ்த்திய அனைத்து மாணவர்களுக்கும் அதிகாரப்பூர்வ உலகச் சாதனைச் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

மேலும், அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினர் வி. கே. ராம்குமார், ஆலந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எம். ஹரீஷ், நடிகர் சம்பத் ராம், குழந்தை நடிகர் விதேஷ் ஆனந்த், திரைப்பட தயாரிப்பாளர் நிஷாந்தினி அண்ணாதுரை, மற்றும் திருவாரூர் வீரமணி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு மாணவர்களை பாராட்டினர்

# சேலம் மாநகரில் போக்குவரத்து சீரமைப்பு

சேலம், ஜூலை 12

சேலம் மாநகரில் அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் பொது மக்களின் நலன் கருதியும்,

நோயாளிகளின் நலன் கருதியும் போக்குவரத்து நெரிசலை குறைத்து சீரான போக்குவரத்தை உறுதிப்படுத்தும் நோக்கில் 12.7.2026 முதல் சோதனை அடிப்படையில் சேலம் மாநகரில் புதிய போக்குவரத்து வழித்தட மாற்றம் அமுல்படுத்தப்பட உள்ளது. குறிப்பாக ப்ரீத்தம் , பிரணவ் மற்றும் எஸ்.கே. எஸ் ஆகிய மருத்துவமனைகளுக்கு சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைக்காக வருகை தரும் பொது மக்கள் மற்றும் ஆம்புலன்ஸ் ஊர்திகளுக்கு எந்த வித சிரமமும் ஏற்படாத வகையில் பொது மக்களின் உயிரை காக்கும் பொருட்டு சேலம் மாநகரில் போக்குவரத்து சீரமைப்பை ஒழுங்கு படுத்தும் விதமாக சேலம் மாநகர காவல் துறையினருக்கு தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி சோதனை அடிப்படையில் இன்று 12.07.2026 முதல் பிருந்தாவன் சாலை மற்றும் அதனை ஒட்டி உள்ள மருத்துவமனைகளுக்கு செல்லும் நோயாளிகளின்ஊர்திகள், நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் வாகனங்கள் ஓமலூர் பிரதான சாலையிலிருந்து வழக்கம் போல் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறது. எனினும் வெளியே வரும் வழித்தடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மருத்துவமனைபகுதிக்கு சென்ற வாகனங்கள் எஸ். கே.எஸ் மருத்துவமனை சாலை செவன்த் கிராஸ் சாலை எல்ஐசி காலனி சாலை வழியாக வெளியே வந்து ஓமலூர் பிரதான சாலையை அடைய வேண்டும். எல்.ஐ.சி காலனி ஏழாவது கிராஸ் சாலை மற்றும் வசந்தம் ஹோட்டல் சாலை நோக்கி செல்லும் அனைத்து வாகனங்களும் எஸ்.கே.எஸ் மருத்துவமனை சந்திப்பு வழியாக மட்டுமே செல்ல வேண்டும். இதற்காக எல்ஐசி காலனி சாலை ஒரு வழி பாதையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பிருந்தாவன் சாலையில் இருந்து வரும் வாகனங்கள் வலது புறம் திரும்பி ஏழாவது கிராஸ் சாலை வழியாக மட்டுமே செல்ல வேண்டும். இந்த வாகனங்கள் நேரடியாக ஓமலூர் பிரதான சாலைக்கு செல்ல அனுமதிக்கப்பட மாட்டாது. இந்த போக்குவரத்து மாற்றங்கள் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட உள்ளதால் அதன் செயல் திறன் குறித்து ஆய்வு செய்யப்பட்டு தேவைக்கேற்ப தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுவது குறித்து முடிவு எடுக்கப்படும்.

எனவே பொதுமக்கள் அனைவரும் மேற்கண்ட போக்கு வரத்து மாற்றங்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி போக்குவரத்து காவல்துறையினரின் அறிவுறுத்தல்களை பின்பற்றி பாதுகாப்பான மற்றும் சீரான போக்குவரத்துக்கு துணை நிற்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்துள்ளார்.

# குடிநீர் கேட்டு கொக்கரப்பட்டி மக்கள் சாலை மறியல்: போக்குவரத்து பாதிப்பு



கிருஷ்ணகிரி, ஜூலை 12

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூர் ஒன்றியம், அந்தேரிப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட கொக்கரப்பட்டி கிராமத்தில் நீண்ட நாட்களாக நிலவி வரும் கடும் குடிநீர் தட்டுப்பாட்டைக் கண்டித்து, அப்பகுதி மக்கள் இன்று காலை சாமல்பட்டி சாலையில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேருந்துகளை மறித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. அரசு மற்றும் தனியார் பேருந்துகள் நடுவழியில் நிறுத்தப்பட்டதால் பயணிகள் சிரமமடைந்தனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த மத்தூர் காவல் ஆய்வாளர் வெங்கடேஷ் பிரபு, போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். குடிநீர் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததைத் தொடர்ந்து, பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டனர். கொக்கரப்பட்டி கிராமத்தில் உள்ள 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு தண்ணீர் ஏற்றும் மோட்டார் மற்றும் ஸ்டார்ட்டர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்ததாக பொதுமக்கள் தெரிவித்தனர். அவற்றை பழுது நீக்க எடுத்துச் சென்ற ஊராட்சி செயலாளர் இதுவரை திருப்பி வழங்கவில்லை என்றும் அவர்கள் குற்றம்சாட்டினர். மேலும், இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகம் மற்றும் கிராம சபைக் கூட்டங்களில் பலமுறை மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர். அதிகாரிகளின் அலட்சியப் போக்கே தங்களை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடச் செய்ததாக அவர்கள் கூறினர்.

# மகளிர் சுயஉதவி குழுக்களின் மதி அனுபவ அங்காடி விற்பனையினை அமைச்சர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூலை. 12

தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட சுவாமிநாதபுரம் பகுதியில் மகளிர் சுய உதவி குழவினருக்கான மதி அனுபவ அங்காடி திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். கன்னியாகுமரி சட்டமன்ற உறுப்பினர் தளவாய் சுந்தரம் முன்னிலை வகித்தார். விற்பனையினை சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்புர பகுதிகளை சேர்த்து மொத்தம் 11,735 மகளிர் குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றது. இதில் மொத்தம் 1,49,552 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் விதமாக மாவட்ட மற்றும் மாநில அளவிலான விற்பனை கண்காட்சிகள், கல்லூரி சந்தைகள், உணவு திருவிழா, நடமாடும் மதி அங்காடிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் மாவட்டத்திற்குட்பட்ட 48 இடங்களில் மதி அங்காடி சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட சுவாமிநா தபுரம் பகுதியில் ரூ.50 இலட்சம் மதிப்பில் மகளிர் குழு உறுப்பினர்கள் மூலம் மதி அனுபவ அங்காடி விற்பனை துவக்கப்பட்டுள்ளது.

இந்த மதி அனுபவ அங்காடி மூலம் பழங்குடியின மக்களின் உற்பத்தி பொருட்களான நல்ல மிளகு, கிராம்பு, கஸ்தூரி மஞ்சள், தேன், கன்னியாகுமரி மாவட்ட மகளிர் சுயஉதவி உறுப்பினர்களின் உற்பத்தி பொருட்களான வாழைநார் பொருட்கள், பனை ஓலை பொருட்கள், மண்பாண்ட பொருட்கள், சங்கு பொருட்கள், ஆயத்த ஆடைகள், உலர்மீன் வகைகள், ஊறுகாய் வகைகள், பாரம்பரிய உணவு பொருட்கள் உட்பட 80க்கும் மேற்பட்ட கைவினை பொருட்கள் மற்றும் மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்படவுள்ளது. என கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் உதவி ஆட்சியர் (பயிற்சி )மோனிகா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ்.காளீஸ்வரி, கன்னியாகுமரி நகர்மன்ற தலைவர் குமரி ஸ்டீபன், மாவட்ட சுற்றுலா அலுவலர் காமராஜ், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

# தொண்டி பி.வி.பட்டணத்தில் பெண்களுக்கான சமூக பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம்

## கவுன்சிலர் சமீமா பானு தலைமை வகித்தார்



ராமநாதபுரம், ஜுலை 12

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி அருகே பி.வி. பட்டணம் இஸ்லாமியா பிரச்சார பேரவை தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் பேரவை சார்பில் பெண்களுக்கான சமூக பாதுகாப்பு விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் 14வது வார்டு கவுன்சிலர் சமீமா பானு தலைமை வகித்தார். ஆலிமா முத்து நாச்சியா கிராத் ஓதினார். செரிபா ஜைனுலாப்தீன் சிற்றுரை வழங்கினார். ஜன்னத்துல் பிர்தவ்ஸ் ஜுனைதா பானு ஆலிமா செய்யது சுல்த்தான் ஆகியோர் சிறப்பு உரையாற்றினர். தமுமுக மாநில செயலாளர் சாதிக்பாட்சா, மாவட்ட தலைவர் வழக்கறிஞர் ஜிப்ரி, மமக மாவட்ட துணைச் செயலாளர் கவுன்சிலர் பெரியசாமி, ஐபிபி அன்சாரி மற்றும் தொண்டி , பி.வி. பட்டணம் கிளை நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

ஆலிமா ஜான்ராணி மனித நேய மக்கள் கட்சி தலைமை செயற்குழு உறுப்பினர் நிகழ்த்தினர். பெண்களுக்கான சமூகப் பாதுகாப்பு என்பது வெறும் சட்டங்கள் சார்ந்தது மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் மனநிலை மற்றும் கலாச்சாரம் சார்ந்தது. பாதுகாப்பின் அவசியம் அடிப்படை உரிமை: பாதுகாப்பு என்பது ஒரு பெண்ணின் அடிப்படை மனித உரிமை. ஒரு பெண் அச்சமின்றி நடமாடும் சூழலே ஆரோக்கியமான சமூகத்திற்கு அடையாளம். நாட்டின் வளர்ச்சி. பெண்கள் சமூக த்தின் சரிபாதி. அவர்கள் பாதுகாப்பாக இருக்கும் போதுதான், கல்வியிலும் பொருளாதாரத்திலும் அவர்களால் முழுமையாகப் பங்களிக்க முடியும். வன்முறைகளிலிருந்து பாதுகாப்பு மற்றும் ஆரோக்கியமான மனநிலையை உருவாக்கும் சூழல்.

பாலியல் துன்புறுத்தல் இல்லாத பணிச் சூழல் மற்றும் பொருளாதாரச் சுதந்திரம். டிஜிட்டல் பாதுகாப்பு இன்றைய காலகட்டத்தில் இணையவழிக் குற்றங்கள் (Cyber crimes) அதிகரித்துள்ளன. சமூக வலைதளங்கள் மற்றும் இணையத்தில் பெண்களின் தனிமனித உரிமை மற்றும் பாதுகாப்பு மிக அவசியம்.

குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் ( 2005): பெண்களுக்கு எதிராக வீட்டில் நடக்கும் வன்முறைகளுக்கு எதிரான பாதுகாப்பு. பணிபுரியும் இடங்களில் பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் (POSH Act, 2013 ): பணிபுரியும் இடங்களில் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல். பாதுகாப்பு. சமூகம் மற்றும் தனிநபர் செய்ய வேண்டியவை பாதுகாப்பு என்பது சட்டம் மட்டும் தருவ தல்ல, சமூகம் செய்ய வேண்டிய மாற்றங்கள்: கல்வி மற்றும் விழிப்புணர்வு: பெண்களுக்குத் தங்கள் உரிமைகள் குறித்தும், சட்டங்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஆணின் பங்கு: "பெண்களைக் காப்பது" என்பதை விட, "பெண்களுக்கு மதிப்பளிப்பது" மற்றும் "பெண்களுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவது" என்பதே ஆண்களின் கடமை என்ற கருத்தை வலியுறுத்தலாம்.

குழந்தை வளர்ப்பு: சிறுவயதிலேயே ஆண் குழந்தைகளுக்குப் பெண்களை மதிக்கும் பண்பையும், பெண் குழந்தைகளுக்குத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் தன்னம்பிக்கையையும் போதிக்க வேண்டும்.

"ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், அங்குள்ள பெண்கள் அச்சமின்றி வெளியே செல்ல வேண்டும்" வன்முறை இல்லாத, சமவாய்ப்புள்ள, மரியாதையான சமூகத்தையே நாம் உருவாக்க வேண்டும். பாதுகாப்பு என்பது தனிமனிதனின் கடமை மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த சமூகத்தின் பொறுப்பு என்பதை வலியுறுத்தி பேசினர். 100க்கும் மேற்பட்ட பெண்கள் ஏராளமான ஆண்கள் பங்குபெற்றனர் . இதற்கான ஏற்பாடுகள் பி.விபட்டினம் கிளை நிர்வாகிகள் சிறப்பாக செய்தனர். கமர் நிஷா நன்றி கூறினார்.




கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில், 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சியை, மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன், சட்டமன்ற உறுப்பினர்கள் .பா.முகுந்தன் கிருஷ்ணகிரி, டாக்டர்.ந.இளையராஜா, ஊத்தங்கரை, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .கோ.சி. அனிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஜோய்ஆலுக்காஸ் வழங்கும் 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜூவெல்லரி ஷோ'



மதுரை, ஜூலை 12

உலகின் ஃபேவரிட் ஜுவல்லர் ஜோய்ஆலுக்காஸ், தனது மதுரை நேதாஜி ரோடு ஷோரூமில் ஜூலை 10, 2026 முதல் 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜூவல்லரி ஷோவை' நடத்துகிறது. ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்த சிறப்புக் கண்காட்சி, வைர நகைகளின் கைவினைத்திறன், நேர்த்தி மற்றும் புதுமையைகொண்டாடும்மறக்கமுடியாத அனுபவமாக அமையும்.

மணமகள் அணிகலன்களுக்கான பிரமாண்டமான வைர செட் முதல் அன்றாட பயன்பாட்டிற்கேற்ற நவீன வடிவமைப்புகள் வரை, காலத்தால் அழியாத பாரம்பரியத்தையும் சமகால அழகியலையும் ஒருங்கிணைக்கும் அற்புதமான நகைகள் இந்தக் கண்காட்சியில் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு வடிவமைப்பும் தலைசிறந்த படைப்பாக விளங்குவதுடன், இந்தக் கண்காட்சி காலத்தில் மட்டுமே இவை கிடைக்கும்.

இது குறித்து ஜோய்ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரான டாக்டர். ஜோய்ஆலுக்காஸ் கூறியதாவது: 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜூவல்லரி ஷோ'என்பது வைரங்களின் மீதுள்ள பெருமைக்கும், நகை வடிவமைப்பில் முழுமைத்தன்மையை நோக்கிய எங்கள் அர்ப்பணிப்பிற்கும் உள்ள தொடர்பை விவரிக்கும் ஓர் நிகழ்வாகும். மதுரை எங்கள் இதயத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது. திருவிழா காலத்தை முன்னிட்டு இந்தக் கண்காட்சி நடைபெறுகிறது. அழகு, தனித்துவம் மற்றும் சிறந்த கைவினைத்திறனை பிரதிபலிக்கும் பிரத்யேக வடிவமைப்புகளை வாடிக்கையாளர்கள் கண்டறிய ஓர் அரிய வாய்ப்பை வழங்கும்."

என்று தெரிவித்தார்.

இந்த சிறப்பு நிகழ்வை முன்னிட்டு, கண்காட்சி நடைபெறும் காலத்தில் ₹1 லட்சம் மற்றும் அதற்கு மேற்பட்ட மதிப்பில் வைர நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு இலவச தங்க நாணயம் வழங்கப்படும். இது அவர்களின் ஷாப்பிங் அனுபவத்திற்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜூவல்லரி ஷோ', மதுரையில் உள்ள நேதாஜி ரோடு ஷோரூமில் மட்டுமே ஜூலை 26, 2026 வரை நடைபெறும். ஆடம்பரம், அன்பு மற்றும் காலத்தால் அழியாத அழகின் கதைகளை சொல்லும் அற்புதமான வைர உலகத்தை நேரில் கண்டு ரசிக்க அனைத்து வாடிக்கையாளர்களும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

# சேலம் மாவட்ட விவசாய பெருமக்கள் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தகவல்

சேலம், ஜூலை 12

சேலம் மாவட்டத்தில் 2026 காரீப் பருவத்தில் பிரதான பயிர்களுக்கு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன்படி 2026 27 ம் ஆண்டு பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டத்தை சேலம் மாவட்டத்தில் சேமா ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் மூலம் செயல்படுத்தப்பட உள்ளது. நெல்லுக்கு காப்பீடு செய்திட கால கெடு 31.7.2026 காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ 38,630/= பிரீமியம் தொகை ரூபாய் 773 எனவும், சோளம் காப்பீடு செய்திட காலக்கெடு 17. 8. 2026 காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ 10, 176 பிரீமியம் தொகை ரூபாய் 24 எனவும், சாமை காப்பீடு செய்திட காலக்கெடு 17.8. 2026 காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ 9,979 பிரீமியம் தொகை ரூ 200 எனவும், நிலக்கடலை காப்பீடு செய்திட காலகடு 17.8.2026 காப்பீட்டுத் தொகை ஏக்கருக்கு ரூ. 22,329 பிரீமியம் தொகை 447 எனவும், ராகி காப்பீடு செய்திட காலக்கெடு 31.8. 2026 காப்பீட்டு தொகை ஏக்கருக்கு ரூ. 12,607 பிரிமியம் தொகை ரூபாய் 253 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே அறிவிக்கை செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு கடன் பெறும் விவசாயிகள் தங்களது வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவும் கடன் பெற விவசாயிகள் பொது சேவை மையங்கள் மூலமாகவும் பயிர் காப்பீட்டுத் தொகையில் இரண்டு சதவிகிதம் பிரீமிய தொகையாகவும் செலுத்தி உரிய காலகெடுவிற்குள் பயிர் காப்பீடு செய்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதேபோன்று அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்களுக்கு அறிவிக்கை செய்யப்பட்ட பிர்க்காவில் உள்ள விவசாயிகள் நடப்பில் உள்ள சேமிப்பு வங்கி கணக்கு புத்தக நகல், ஆதார் அட்டை நகல், பயிர் சாகுபடி அடங்கல், விண்ணப்ப படிவம் மற்றும் முன்மொழிவு படிவம் ஆகிய ஆவணங்களுடன் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலமாக உரிய பிரிமிய தொகையினை செலுத்தி பயிர் காப்பீடு செய்து இயற்கை இடர்பாடு ஏற்படும் காலத்தில் உரிய காப்பீட்டுத் தொகை பெற்று பயனடையவும், இது குறித்து கூடுதல் விவரங்களுக்கு தங்களது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள வேளாண்மை துறை அலுவலர்களை நேரில் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம். மேலும் பயிர் காப்பீட்டு விவரங்களை தங்கள் செல்லிடைப் பேசியில் உழவர் செயலியை பதிவிறக்கம் செய்து அதன் மூலமும் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறியுள்ளார்.

# விளாத்திகுளத்தில் அழகுமுத்துக்கோனின் 269வது குருபூஜை விழா

## வட்டார யாதவர் சமுதாயம் மக்கள் சார்பாக கொண்டாட்டம்



விளாத்திகுளம் ஜூலை12.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் அழகுமுத்துக்கோனின் 316 வது பிறந்த நாள் விழா மற்றும் 269 வது குரு பூஜை விழா தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு அரசியல் அமைப்பினராலும், சமூக ஆர்வலர்கள் சார்பாகவும் அரசு சார்பாகவும் மரியாதை செய்யபட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டார யாதவர் சங்கம் சார்பில்,விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு நன்கு அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அழகு முத்து கோனின் திருவுருவப்படத்துக்கு, விளாத்திகுளம் வட்டார யாதவர் சமுதாயம் சார்பில் மாலையை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது அதனைதொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்புகள்வழங்கி கொண்டாடப்பட்டது. பின்பு அதிமுக, தமிழக வெற்றிகழகம்,திமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# அணைமுகம் அருகே அரித்து செல்லப்படும் சாலை



ஆறுகாணி, ஜூலை 12

ஆறுகாணி அருகே அணைமுகம் செல்லும் சாலையில் அணைமுகம் பம்பு அருகில் கனமழை காரணமாக சாலையோரம் அரிக்கப்பட்டு பெரும் விபத்து ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இச்சாலை வழியாக பேருந்துகள் செல்லும் போது சாலை இடிந்து ஆற்றில் விழும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது பள்ளம் உள்ளதை அறிய சிவப்பு கொடி நிறுத்தப்பட்டுள்ளது.

உடனடியாக பேரூராட்சி நிர்வாகம் போர்கால அடிப்படையில் சாலை அரிப்பை சீரமைக்க வேண்டுமென ஊர் மக்கள் சார்பாக கோரிக்கை விடுத்துள்ளனர்

## தருமபுரி செட்டிகரைப் பகுதியில்

# உணவு பாதுகாப்புத் துறையினர் ஆய்வில் பழைய இறைச்சி மற்றும் விதி மீறல்கள் காணப்பட்ட கடைகளுக்கு அபராதம் மற்றும் எச்சரிக்கை நோட்டீஸ்



தருமபுரி ஜூலை 12

தருமபுரி உணவு பாதுகாப்பு துறைக்கு வந்த புகார் அடிப்படையிலும், மாநில உணவு பாதுகாப்புத் துறை ஆணையர் உத்தரவு பேரிலும் தருமபுரி உணவு பாதுகாப்புத்துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ் குமார் மற்றும் தருமபுரி நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் உள்ளிட்ட குழுவினர் தருமபுரி ஒன்றியத்திற்கு உட்பட்ட செட்டிகரை, டீக்கடை பஸ் ஸ்டாப், மாதுப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள உணவகங்கள், பேக்கரிகள், மளிகைக் கடைகள், துரித உணவுகள், இறைச்சி கடைகள், குளிர்பான பழக்கடைகள் மற்றும் பால் தயாரிப்பு நிறுவனங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் ஒரு சில்லி சிக்கன் துரித உணவகத்தில் சில்லி சிக்கன் மற்றும் புதினா சில்லி சிக்கன் என்ற பெயரில் விற்பனை செய்வதாக தயாரிப்பு நிலையில் வைக்கப்பட்டிருந்த சேர்க்கை நிறமூட்டி கன்டெய்னர்100 கிராம் அளவிலான 10 டப்பிகள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் செயற்கை நிறமூட்டி சேர்க்கப்பட்டிருந்த கலவை பச்சை இறைச்சி சுமார் 3 கிலோ அளவிலானது உடன் குளிர் பதன பெட்டியில் இருந்த நாள்பட்ட பழைய இறைச்சியும் பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டது. அங்கிருந்து இரண்டு உணவகங்களில் பழைய இறைச்சிகள், குளிர் பதன பெட்டி மற்றும் உணவகத்தின் பின்புறம் வைக்கப்பட்டிருந்த 5 கிலோ இறைச்சி, சப்பாத்தி பிசைந்த மாவு, நாள்பட்ட நிலையில் இருகி இருந்த மாவையும், செயற்கை நிறம் ஏற்றப்பட்டு காணப்பட்ட சோம்பு சுமார் ஒரு கிலோ பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் ஒரு உணவகத்தில் பலமுறை பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய் சுமார் 2 லிட்டர் பறிமுதல் செய்யப்பட்டது. ஒரு பல்பொருள் அங்காடி (டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ்) உடன் இணைந்த பேக்கரி மற்றும் பலகார விற்பனை நிலையத்தில் அச்சிடப்பட்ட செய்தித்தாள்களில் எண்ணெய் பலகாரம் மற்றும் உணவு பொருட்கள் விநியோகம் செய்தல், காட்சிப்படுத்துதல் காணப்பட்டு அச்சிடப்பட்ட செய்தித்தாள்களில் இருந்த பஜ்ஜி, போண்டா எண்ணெய் பலகாரங்கள் அப்புறப்படுத்தப்பட்டு பட்டர் பேப்பர், அச்சிடப்படாத பேப்பர் மற்றும் உரிய சில்வர் பாத்திரத்தில், வாழை இலைகளில் காட்சிப்படுத்தியும், இலை அச்சிடப்படாத பேப்பர் பிளேட்டுகளில் பரிமாறுதல், பொட்டலம் இடுதல் செய்ய வலியுறுத்தப்பட்டது. ஒரு பேக்கரியில் பாக்கெட்டுகளில் தின்பண்டங்களில் உரிய விவரங்கள் அதாவது தயாரிப்பு தேதி, முடிவு தேதி இல்லாதவற்றை பறிமுதல் செய்து எச்சரிக்கை நோட்டீஸ் மற்றும் உடனடி அபராத விதிக்கப்பட்டது. பொட்டலம் இடப்பட்ட தின்பண்டங்கள் சிப்ஸ், நிப்பட் உள்ளிட்டவை மற்றும் குளிர்பானங்கள், குடிநீர் பாட்டில்கள் அனைத்தும் உரிய லேபிள் நடைமுறை விதிகள் படி உணவுப் பொருள் பெயர், தயாரிப்பு முகவரி, தயாரிப்பு தேதி, முடிவு தேதி, உணவு பாதுகாப்பு உரிமம் எண் மற்றும் நுகர்வோர் தொடர்பு எண் ஆகியவை கண்டிப்பாக அச்சடிக்கப்பட்டிருந்தல் வேண்டும். இதை விற்பனையாளர்கள் கண்காணித்து விற்பனை செய்திட வேண்டும் எனவும் விழிப்புணர்வு செய்யப்பட்டது. விதிமுறைகள் மீறப்பட்ட மூன்று உணவகங்கள், ஒரு பேக்கரி ஆகிய வற்றிற்கு தலா ரூ. 1,000 விதம் ரூ.4,000 செயற்கை நிறமூட்டி டப்பிகள், நிறமூட்டி கலந்த இறைச்சிகள் பறிமுதல் செய்த சில்லி சிக்கன்துரித உணவகம் மற்றும் பல்பொருள் அங்காடிக்கு உள்ளிட்ட இரண்டுக்கும் உடனடி அபராதம் தலா ரூ. 2000 விதம் ரூ. 4,000 ஆக மொத்தம் ரூ. 8,000 உடனடி அபராதம் விதிக்கப்பட்டு மேம்பாட்டு அறிவிக்கை நோட்டீஸ் வழங்கப்பட்டது. ஆங்காங்கே நெகிழிப் பொருட்கள் தவிர்க்கவும் அதற்கான மாற்றுப் பொருளை குறித்து ஸ்டிக்கர்கள் மற்றும் உணவு சார்ந்த புகார் மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை கண்டால் தெரிவிக்க உணவு பாதுகாப்பு புகார் எண் : 9444042322 அடங்கிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது. அனைத்து உணவு வணிகர்களும் உணவு பாதுகாப்பு உரிமை பெற்று வணிகம் புரிந்திட வலியுறுத்தப்பட்டது.



# உலக சமுதாய சேவா சங்க தலைவர் எஸ்.கே.எம். மயிலானந்தனுக்கு பத்மபூஷன் விருது

## ஈரோடு மாவட்டத்துக்கு பெருமை கலெக்டர் கந்தசாமி பேச்சு

ஈரோடு, ஜூலை 11

சமூக சேவைக்காக பத்மபூஷன் விருது பெற்ற உலக சமுதாய சேவா சங்கத் தலைவரும், எஸ்.கே.எம். குழுமத் தலைவருமான எஸ்.கே.எம். மயிலானந்தனுக்கு ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன், வேளாளர் கல்வி நிறுவனங்கள் மற்றும் சமூகச் சேவை அமைப்புகள் சார்பில் பாராட்டு விழா நடைபெற்றது.

ஈரோடு வேளாளர் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவுக்கு கலெக்டர் கந்தசாமி தலைமை வகித்தார். அப்போது அவர்பேசியதாவது:

எளிய குடும்பத்தில் பிறந்த டாக்டர் எஸ்.கே.எம்.மயிலானந்தன் தனது கடின உழைப்பால் தொழில்துறையில் உயர்ந்ததுடன், கடந்த 36 ஆண்டுகளாக நுகர்வோர் சேவை, ஆன்மிக சேவை மற்றும் கிராமப்புற மேம்பாட்டுப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். அவருக்கு பத்மபூஷண் விருது வழங்கப்பட்டிருப்பது ஈரோடு மாவட்டத்திற்கே பெருமை சேர்ப்பதாகும். இவ்வாறு அவர் பேசினார் . விழாவில் முன்னாள் மத்திய அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன், பி.வி.பி. பள்ளி தாளாளர் எல்.எம். ராமகிருஷ்ணன், ஈரோடு கலைக் கல்லூரி தாளாளர் கே.கே.பாலுசாமி, சக்தி மசாலா நிறுவனர் பி.சி. துரைசாமி, மக்கள் சிந்தனைப் பேரவை தலைவர் ஸ்டாலின் குணசேகரன், வேளாளர் கல்வி நிறுவனங்களின் செயலாளர் சந்திரசேகர், கொங்கு வேளாளர் தொழில்நுட்ப கல்வி அறக்கட்டளைதலைவர்யு.ஆர். சி.தேவராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். விழாவில் ஏற்புரையாற்றிய டாக்டர் எஸ். கே.எம்.மயிலானந்தன், சுவாமி விவேகானந்தரின் "சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு கிராம மக்களுக்கு சேவை செய்வதே தனது வாழ்வின் நோக்கமாக அமைந்தது.

வேதாத்திரி மகரிஷியின் பயிற்சிகள் கிராம மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் கிராமிய சேவைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இதுவரை 400 க்கும் மேற்பட்ட கிராமங்கள் தத்தெடுக்கப்பட்டு அங்குள்ள மக்களுக்கு யோகா, தியானம் மற்றும் அறநெறிப் பயிற்சிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த பத்மபூஷன் விருது மேலும் சேவை செய்யும் ஊக்கத்தை அளித்துள்ளது என்று அவர் கூறினார்.

முன்னதாக ஒளிரும் ஈரோடு அமைப்பின் தலைவர் சின்னசாமி வரவேற்றார்.முடிவில்தேசியநலவிழிப்புணர்வு இயக்க செயலாளர் சுந்தரம் நன்றி கூறினார்.

## அருமனை அருகே

# அதிக போதையில் சாலையில் காயத்துடன் கடந்த இளம் பெண், வாலிபர்கள் பாதுகாத்த பெண் போலீஸ்

மார்த்தாண்டம், ஜூலை.12

அருமனை அருகே உள்ள படப்பச்சையில் இருந்து திற்பரப்பு செல்லும் சாலை உள்ளது. இங்கு நேற்று முன் தினம் மாலை சாலையோரம் 3 வாலிபர்கள் மற்றும் ஒரு இளம் பெண் மது போதையில் தள்ளாடியபடி தரையில் விழுந்து கிடந்தனர். அவர்கள் அருகே ஒரு பைக் நின்றது. இதில் இரண்டு வாலிபர்களுக்கு காயங்கள் இருந்தது. இளம் பெண் அதீத மது போதையில் சாலையில் விழுந்து கிடந்துள்ளார். அப்போது அந்த வழியாக சென்றவர்கள் அந்த பண்ணை மீட்க முயன்றனர். ஆனால் வாலிபர்கள் பொது மக்களை தகாத வார்த்தைகளால் பேசி நெருங்க விடாமல் தடுத்தனர்.

அப்போது அந்த வழியாக கடையாலுமூடு காவல் நிலையத்தில் பணியாற்றும் ஏட்டு பிரேமலதா என்பவர் பைக்கில் சென்றுள்ளார். போலீசை கண்டதும் வாலிபர் ஒருவர் அங்கிருந்து ஓட்டம் பிடித்துள்ளார். இளம்பெண், இரண்டு வாலிபர்கள் போதையில் கிடந்தனர். ஏட்டு பிரேமலதா அருகில் சென்றபோது அந்த வாலிபர்கள் பெண்போலீசை மீட்க விடாமல் தடுத்துள்ளனர். மேலும் போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்க கூடாது என மிரட்டி உள்ளனர்.

உடனடியாக ஏட்டு பிரேமலதா இது குறித்து போலீசருக்கு தகவல் தெரிவித்தார். பின்னர் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து இளம் பெண்ணையும், வாலிபர்களையும் மீட்டு குழித்துறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதில் ஒரு வாலிபர் மற்றும் இளம் பெண் மேல் சிகிச்சைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். போலீசார் அவர்களிடம் நடத்திய முதல் கட்ட விசாரணையில் வாலிபர்கள் அருமனை பகுதியை சேர்ந்த ஜீனோ, தென்காசி பகுதியை சேர்ந்த பிரசாந்த் மற்றும் புதுக்கோட்டையை சேர்ந்த இளம் பெண் என்பது தெரிய வந்தது. இவர்கள் சென்னையில் ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்ததாகவும், அங்கிருந்து திற்பரப்பு அருவிக்கு சுற்றுலா வந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த 5ம் தேதி திற்பரப்புக்கு வந்துள்ளனர். இதற்கு இடையில் மதுபோதையில் இந்த சாலையோரம் கடந்த இந்த சம்பவம் நடத்துள்ளது. இது குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். இளம்பெண்ணை பாதுகாத்த எட்டு பிரேமலதாவிற்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறது.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர் கூட்டம்

## சமூக நுகர்வோர் சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன் கலந்து கொண்டார்



கிருஷ்ணகிரி, ஜூலை 12:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொது விநியோகத் திட்ட சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமாரின் உத்தரவின் பெயரில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது வினியோகத் திட்டத்தில் காணப்படும் குறைகளை களைவதற்கும், மக்களின் குறைகளை கேட்டு உடனுக்குடன் அவற்றை நிவர்த்தி செய்யவும், குடும்ப அட்டைகளில் பெயர் திருத்தம், பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், மற்றும் முகவரி மாற்றம் போன்ற கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் வகையில் இன்று மஸ்ஜித்கொல்லஹள்ளி, சுண்டக்காப்பட்டி, உள்ளிட்ட 8 கிராமங்களில், பொதுமக்களுக்காக சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலரால் நடத்தப்பட்டது. இந்த சிறப்பு கூட்டத்தில் பொதுமக்கள் தங்களது குறைகளை வட்ட வழங்கல் அலுவலரிடம் மனு அளித்து தங்களது குறைகளை உடனடியாக நிவர்த்தி செய்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்க மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன் கலந்து கொண்டு பொதுமக்களிடம் பேசும்பொழுது, பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாய விலை கடைகளில் தரமான அரிசி, பருப்பு, எண்ணெய், உள்ளிட்ட பொருட்களை ஆராய்ந்து அதில் ஏதேனும் குறை இருப்பின் சம்பந்தப்பட்ட துறை அலுவலரிடம் புகார் தெரிவிக்குமாறும், அவசியம் பற்று கேட்டு பெற்றுக் கொள்ளுமாறும் வலியுறுத்தினார். இந்த நிகழ்வின்போது தனி வருவாய் ஆய்வாளர் மாதவன், நியாய விலை கடை விற்பனையாளர் தம்பிதுரை, வட்ட பொறியாளர் விக்னேஷ், சமூக நுகர்வோர் சங்க மாநில இணைச்செயலாளர் சையத் அஸ்ஹர், உள்ளிட்ட ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




## தக்கலை அருகே

# கணவன், குழந்தையை விட்டு கள்ளக்காதலனுடன் குடும்பம் நடத்தும் மனைவி; எஸ்பியிடம் கணவர் புகார்

நாகர்கோவில், ஜூலை.12

தக்கலை அருகே பரம்பை ஆலங்கோடு பகுதியை சேர்ந்தவர் வேணு(31). இவர் இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த பெண்ஒருவரை5வருடங்களுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந் நிலையில் வேணு நேற்று நாகர்கோவிலில் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பரபரப்பு புகார் ஒன்றை அளித்துள்ளார். அந்த புகாரில் கூறி இருப்பதாவது:

நான் எனது மனைவியை காதலித்து திருமணம் செய்துகொண்டேன். எங்களுக்கு தற்போது நான்கரை வயதில் ஒரு மகன் இருக்கிறான். சில மாதங்களுக்கு முன்பு எனது முயற்சியால் எனது மனைவிக்கு கற்பகோடு அங்கன்வாடியில் ஆசிரியராக வேலை கிடைத்தது. வேலைக்குச் சேர்ந்த இரண்டு மாதங்களிலேயே, திங்கள்சந்தை டூ அழகியமண்டபம் தடத்தில் ஒரு மினி பேருந்து ஓட்டுநராகப் பணிபுரியும் பெங்கரையைச் சேர்ந்த வில்வின் என்ற இளைஞருடன் எனது மனைவிக்கு பழக்கம் ஏற்பட்டுள்ளது. இந்தப் பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியது.

மேலும் அந்த அங்கன்வாடி மையத்தில் வைத்து கள்ள காதலனுடன் இளம் பெண் பாலியல் ரீதியாக சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளனர். இது அங்கு கற்பிக்கும் குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்கும் தெரிய வந்துள்ளது. ஆனால் அதை கூட பொருட் படுத்தாமல் குழந்தைகளுக்கு முன்பு முகச்சுளிப்பை ஏற்படுத்தும் விதமாக செயல்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் இந்த கள்ளக்காதல் விவகாரம் குறித்து எனது மனைவியிடம் தட்டிக் கேட்டபோது, தகராறு ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து,கடந்தசிலநாட்களுக்கு முன்பு வீட்டில் இருந்த 12 சவரன் தங்க நகைகள் மற்றும் ₹50,000 ரொக்கப் பணத்தை எடுத்துக்கொண்டு, எனது நான்கரை வயது குழந்தையை தவிக்க விட்டுவிட்டு மனைவி கள்ளக்காதலனுடன் தப்பியோடியுள்ளார்.

பின்னர் நாகர்கோவிலில் வைத்து நேரில் சந்தித்த அவளது கள்ளக்காதலன் வில்வின், என்னையும் எனது குழந்தையையும் கொலை செய்து விடுவதாகவும், எனது மனைவியை திருமணம் செய்ய உள்ளதாகவும் கூறி மிரட்டி வருகிறார்.

இந்த விவகாரத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தலையிட்டு, தனக்கும் தனது குழந்தைக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டும்எனவும்,திருடப்பட்ட நகைகளை மீட்டுத் தர வேண்டும் எனவும் வேணு தனது புகாரில் உருக்கமாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

# 22 கிலோ கஞ்சா பிடிபட்டது



திருவள்ளூர், ஜூலை 13

திருவள்ளூர் மாவட்டம் கவரப்பேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கவரப்பேட்டை கேஎஸ்ரோடுஜங்ஷன்அருகே சந்தேகத்துக்குரிய நிலையில் நின்று இருந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த டெபதாஸ் சாகுஎன்பவரை சோதனை செய்தபோது அவர்வைத்திருந்தபையில் சுமார் 22.4 கிலோ பிடிபட்டது உடனடியாக அவரிடம் கவரப்பேட்டை காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டு கைது செய்து சிறையில் அடைத்தனர்

## செவ்வாப்பேட்டை அரசு

# ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருவூர் அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம்

## திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் அமுதா பங்கேற்பு



திருவள்ளூர்மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் தலைமை ஆசிரியர் ஆர். வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் லாவண்யா ஜெயக்குமார் அனைவரையும் வரவேற்றார், நிர்வாகிகள் ஜெயக்குமார், சதீஷ்குமார், நிரஞ்சன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் இந்த கல்வி ஆண்டின் முதல் பள்ளி மேலாண்மை கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மாவட்டக் கல்வி அலுவலர் மதிப்புமிகு எஸ்.அமுதா கலந்து கொண்டு பள்ளி வளர்ச்சிக்கு எவ்வாறு செயல்பட வேண்டும் மேலாண்மைக் குழுவின் பங்கு என்ன மாணவர்கள் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் சுற்றுச்சுவர் அமைக்கவும் , கலையரங்கம் கட்டவும் நுழைவு வாயில் பெரியதாக்கி பாதுகாப்பை பல படுத்துதல் இரவு மற்றும் பகல் நேரம் என இரு வேலையும் காவலர்களை நியமிக்க தனியார் தொண்டு நிறுவனங்களை அணுகி கட்டமைபுக்களை மேம்படுத்தல் உள்ளிட்ட தீர்மாணங்கள் நிறைவேற்ற பட்டது மேலும் நிகழ்வில நிர்வாகிகள் காந்தராஜ், மூர்த்தி, குணசேகரன் ,ஆசிரியர்கள் பி.மணிகண்டன், ஜே.வசந்த், கோமளா, ராஜேஸ்வரி B , கோகுல், சங்கரலிங்கம், சுரேஷ் உள்ளிட்ட ஆசிரியர்கள்,பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் பெற்றோர்கள் திரளாக கலந்து கொண்டனர் முடிவில் முன்னாள் மாணவ உறுப்பினரும் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் நன்றி கூரினார்

அதேபோன்று திருவூர் அரசு ஆதிதிராவடர் நல ஆரம்பப்பள்ளியிலும் பள்ளி மேலாண்மைக் குழு கூட்டம் பொறுப்பு தலைமையாசிரியர் கி.விஜி அனந்தநாயகி தலைமையிலும் மேலாண்மைக் குழு தலைவர் அ.ஆனந்தி அனைவரையும் வரவேற்றார் துணைத் தலைவர் ம.பூர்ணிமா முன்னிலை வகித்தார் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவரும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர் ( கல்வியாளர் ) சா.அருணன் அவர்கள் கலந்துக் கொண்டு பள்ளியின் வளர்ச்சி மற்றும் மாணவர்கள் சேர்க்கை அதிகப்படுத்த என்ன என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைவரும். ஒன்றிணைந்து செயல்பட்டு மாணவர் சேர்க்கையை அதிகப்படுத்த வேண்டும் என்றார் இக்கூட்டத்திற்கு பெற்றோர்கள் பெருமளவில் கலந்துக் கொண்டனர் முடிவில் பள்ளி மேலாண்மைக் குழு மூலம் தற்காலிக ஆசிரியராக நிமிக்கப் பட்டுள்ள ஆசிரியை பா. தீபா நன்றி கூறினார்

# கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்படும் அமைச்சர் செ.ராஜேஷ் குமார் தகவல்



நாகர்கோவில், ஜூலை 12

சர்வதேச அளவில் புகழ் பெற்ற சுற்றுலாத்தலமாக விளங்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில், சுற்றுலாப் பயணிகளை மேலும் கவரும் வகையிலும், புதிய சுற்றுலாத்தளங்களை உருவாக்குவதோடு, அந்த சுற்றுலாத்தளங்களில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது குறித்த ஆலோசனை கூட்டம் கன்னியாகுமரியில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் கூட்டரங்கில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தலைமை வகித்தார். அமைச்சர் செ.ராஜேஷ் குமார் கூட்டத்தில் கூறியதாவது:

கன்னியாகுமரி மாவட்டத்தின் முக்கிய சுற்றுலாத்தலங்களை சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குறிப்பாக கன்னியாகுமரி, லெமூர், குளச்சல் மற்றும் தேங்காய்ப்பட்டணம் உள்ளிட்ட கடற்கரைகள் மற்றும் பேச்சிப்பாறை அணை ஆகிய பகுதிகளில் சுற்றுலாதலங்களைஉருவாக்குவது குறித்து புதிய கருத்துருக்கள் மற்றும் திட்ட மதிப்பீடுகள் குறித்து விரிவாகக் கலந்தாலோசிக்கப் பட்டது. மாவட்டத்தின் இயற்கை எழில் கொஞ்சும் பகுதிகள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் வகையில் குளச்சல் உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் புதிய பூங்காக்கள் அமைத்தல், இரவு நேரங்களிலும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக இரசிக்கும் வகையில் நவீன மின்விளக்கு வசதிகள், கடற்கரை பகுதிகளில் இளைஞர்கள் உட்பட அனைவரையும் கவரும் வகையில் நீர் விளையாட்டு மற்றும் சாகசச் சுற்றுலாத் திட்டங்களை அறிமுகப்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

மேலும் கன்னியாகுமரி நகராட்சிக்குட்பட்ட சுற்றுலாதலங்களை ரூ.37 கோடி மதிப்பில் மேம்படுத்திட திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இவ்வாறு அமைச்சர் கூறினார்.

முன்னதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக வளாகத்தினை திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு படகு சவாரி மேற்கொள்வதற்கான நுழைவு சீட்டு வழங்கும் அலுவலகத்தினை பார்வையிட்டு, சுற்றுலா பயணிகளிடம் முறையாக நுழைவு சீட்டு வழங்கிறார்களா எனவும், சுற்றுலா பயணிகளின் கோரிக்கைகளை கேட்டறிந்தார்கள். அதனைத் தொடர்ந்து கன்னியாகுமரிகாமராஜர்மணிமண்டபம் அருகில் அமைந்துள்ள காட்சி கோபுரத்தினை பார்வையிட்டு, அந்த இடத்தில் சுற்றுலா தளங்களை மேம்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

## புதுக்கடை அருகே

# பெட்டிக்கடையில் விற்பனைக்கு வைத்திருந்த புகையிலை பொருட்கள் பறிமுதல்

புதுக்கடை, ஜூலை. 12

புதுக்கடை அருகே உள்ள தும்பாலி பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலை பொருள்கள் அங்குள்ள பெட்டிக்கடைகளில் விற்பனை செய்வதாக புதுக்கடை போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதை அடுத்து சப்இன்ஸ்பெக்டர் ஜான்ரோஸ் என்பவர் தலைமையிலான போலீசார் நேற்று அந்தப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது குதிரைவட்டம் பகுதியில் மரிய அற்புதம் என்பவர் நடத்தி வந்த பெட்டிக்கடையில் சோதனை செய்தனர்.

அங்கு அரசால் தடை செய்யப்பட்ட கணேஷ் புகையிலை 5 பண்டில்கள் மற்றும் 15 கிராம் எடை உள்ள 15 பாக்கெட் என மொத்தம் 1கிலோ 350 கிராம் எடைஉள்ள புகையிலை பொருள்கள் மறைத்து வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அவற்றை பறிமுதல் செய்து போலீஸ் நிலையம் கொண்டு வந்தனர். இதையடுத்து பெட்டிக்கடை நடத்திய மரிய அற்புதம் (82 ) என்பவர் மீது வழக்கு பதிவு செய்தனர்.

## புதுக்கடை பகுதியில்

# ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அறிவிக்கப்படாத மின்தடை: மக்கள் அவதி

புதுக்கடை, ஜூலை. 12

புதுக்கடை சுற்று வட்டார பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அறிவிக்கப்படாத மின் தடை நடைபெறுவதால் பொதுமக்கள்அவதிப்பட்டு வருகின்றனர்.

புதுக்கடையில் உயர் அழுத்த மின்வாரிய அலுவலகம் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்குட்பட்ட பகுதிகளில் புதுக்கடை, கீழ்குளம் பேரூராட்சிகள், முஞ்சிறை, விளாத்துறை, பைங்குளம், இனயம்புத்தன்துறை ஊராட்சி பகுதிகள் உள்ளிட்ட பல பகுதிகள் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதிகளில் அரசு, தனியார் பள்ளிகள், கல்லூரிகள், அரசு சுகாதாரத்துறை ஆஸ்பத்திரிகள், அரசு அலுவலகங்கள், முஞ்சிறை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், மேலும் பல்வேறு தொழிற் கூட்டங்களும் அமைந்துள்ளன.

புதுக்கடை பகுதி மிக வேகமாக வளர்ந்து வரும் பகுதியாக உள்ளது. இங்கு கடந்த சில வருடங்களாக புதுக்கடை மின்வாரியத்தில் பெரும் குளறுபடிகள் நடந்து வருவதாக பொதுமக்கள் தரப்பில் புகார் கூறப்பட்டு வருகிறது.அறிவிக்கப்படாதமின்வெட்டுமின்தடைகள் தொடர்ந்து இந்த பகுதியில் நடைபெற்று வருகிறது. இது குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்தாலும், அவர்கள் கண்டு கொள்வது இல்லை.

குறிப்பாக திடீரென மின்தடை ஏற்படும் நேரங்களில் பாதிக்கப்பட்ட அந்த பகுதி பொதுமக்கள் புகார் அளித்தால், சுமார் ஒரு நாள் வரைதாண்டி அதை சீரமைப்பதாக ஏற்கனவே புகார்கள் இருந்து வருகிறது. மின் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட இடத்தை வந்து கண்டு கொள்வதில்லை. இது புதுக்கடை மின்வாரியத்தில் தொடர்ந்து நடைபெறும் செயல் ஆகும்.

இந்த நிலையில் தற்போது கடந்த ஒரு மாத காலமாக புதுக்கடை மின்வாரிய அலுவலக பகுதிகளில் பகல், இரவு வேளை என தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு ஒருமுறை அறிவிக்கப்படாத மின்தடை ஏற்பட்டு வருகிறது. சுமார் 15 நிமிடம் முதல் அரை மணி நேரம் வரை இந்த மின்தடை அடிக்கடி செயல்பட்டு வருகிறது. இதனால் அந்த பகுதியில் உள்ள அரசு அலுவலகங்கள், தனியார் தொழிற்கூடங்கள் மற்றும் அனைத்து தரப்பு பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மின்தடை ஏற்படும் நேரங்களில் புதுக்கடை மின்வாரிய அலுவலகத்தில் உள்ள தரைவழி இணைப்பு போன் நம்பரை தொடர்பு கொண்டால் அது நீண்ட நாட்களாக செயல்படாமல் உள்ளது. சம்பந்தப்பட்ட ஏரியா பணியாளர்களை கூப்பிட்டால் அவர்கள் நாங்கள் இப்போது புதுக்கடை பகுதியில் இல்லை நாங்கள் வேறு பகுதியில் இருக்கிறோம் என்று சொல்லி தப்பித்து விடுகின்றனர். இதனால் யாரிடம் குறைகளை அறிவிப்பது என்று தெரியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர்.

இதற்கு மேலாக துணை பொறியாளர் மற்றும் முதன்மை பொறியாளர் ஆகியோரிடம் புகார் தெரிவித்தாலும் அவர்கள் கண்டு கொள்ளவில்லை என புகார் எழுந்துள்ளது. எனவே புதுக்கடை மின்வாரிய பகுதிகளில் நடைபெறும் மின்தடை குறித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# படித்த வேலை வாய்ப்பற்றோர் உதவி தொகை பெற விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் தகவல்

ஈரோடு ஜூலை 12

ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் படித்த வேலைவாய்ப்பற்றோர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி மாதம் ஒன்றுக்கு எஸ் எஸ் எல் சி தேர்ச்சி பெறாதவர்களுக்கு ரூ.200 ம், தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.300 ம், மேல்நிலைக்கல்வி (12ம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.400 ம் பட்டதாரிகளுக்கு ரூ.600 ம் வழங்கப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகளுக்கு எஸ் எஸ் எல் சிமற்றும் அதற்கு கீழ் படித்தவர்களுக்கு ரூ.600 ம் மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ரூ.750 ம் பட்டதாரிகளுக்கு ரூ.1000 ம் வழங்கப்பட்டுவருகிறது. இதற்கான விண்ணப்பத்தினை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் நேரில் அணுகியும் அல்லது இணையதளம் வாயிலாகவும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகளுக்கு மேல் பதிவினை தொடர்ந்து புதுப்பி த்திருக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் பதிவு செய்து ஒரு வருடம் முடிவடைந்திருக்க வேண்டும்.

எஸ் சி எஸ் டி பிரிவினருக்கு 45 வயதும், இதர பிரிவினருக்கு 40 வயதும் கடந்திருக்கக் கூடாது. விண்ணப்பதாரரின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000 க்கு மிகாமல் இருக்க வேண்டும். விண்ணப்பதாரர் முற்றிலும் வேலையில்லாதவராக இருத்தல் வேண்டும். சுய வேலைவாய்ப்பிலும் ஈடுபட்டிருக்க கூடாது. விண்ணப்பதாரர் கலைஞர் உரிமைத்தொகை மற்றும் வேறு எந்தவொரு நிதியு தவியையும் பெறுபவராக இருத்தல் கூடாது இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சாமல்பட்டியில் மாவீரன் அழகுமுத்துகோன் 269வது குருபூஜை விழா

## அன்னதானம், மரக்கன்றுகள் வழங்கி மரியாதை



கிருஷ்ணகிரி, ஜூலை 13

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை அடுத்த சாமல்பட்டி பேருந்து நிறுத்தம் பகுதியில் சுதந்திரப் போராட்ட தியாகி மாவீரன் அழகுமுத்துகோன் அவர்களின் 269வது குருபூஜை விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு யாதவ மகா சபை மாவட்டத் தலைவர் ஹீண்டாய் ரவி தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி செயலாளர் டி. ஹரிஷ் யாதவ் வரவேற்புரை ஆற்றினார். விழாவில் யாதவ மகாசபை கவுரவத் தலைவர் ஜிம் எம். சக்திவேல், கிழக்கு மாவட்ட செயலாளர் சி. ராஜியாதவ், கிழக்கு மாவட்ட மண்டல பொறுப்பாளர் சி. கோவிந்தராஜ், அதிமுக மத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நரேஷ் யாதவ், சி. அன்பு, பாஜக சுற்றுச்சூழல் மாவட்ட அமைப்பாளர் பிரபு, தமிழக வெற்றி கழக மாவட்ட இணைச் செயலாளர் தாமோதரன், தெற்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி, திருநாவுக்கரசர், குமார் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து, அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த மாவீரன் அழகுமுத்துகோன் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன், மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. விழாவில் பங்கேற்றவர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

சிறப்பு அழைப்பாளர்களாக பூவரசன், சக்திவேல், மணி, மைக்கேல், சந்தோஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், தமிழ்நாடு யாதவ மகாசபை இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் விழாவில் பங்கேற்று மாவீரன் அழகுமுத்துகோனுக்கு அஞ்சலி செலுத்தினர்.



# ஸ்ரீபெரும்புதூரில் இருந்த திமுக தலைவர் கருணாநிதி நிகழ்ச்சி எதற்காக ரத்து செய்யப்பட்டதற்கு ஜெயின் கமிஷனிடம் இன்னும் இந்த கேள்விக்கு இன்னும் விடை தெரியவில்லை

## அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் பேட்டி

மதுரை, ஜூலை 13

திருப்பரங்குன்றம் அடுத்துள்ள திருநகரில் தனியார் மண்டபம் ஒன்றில் தமிழக வெற்றி கழகத்தில் மாற்றுக் கட்சி வழக்கறிஞர்கள் இணையும் விழா தமிழக எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சருக்கு வழக்கறிஞர்கள் செங்கோல் பரிசளித்தனர்.

மாற்றுக்கட்சியை சேர்ந்த வழக்கறிஞர்கள் இணைந்து வருகின்றனர் அதே போல தினந்தோறும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் திமுக அதிமுக நிர்வாகிகள் கிளைக் கழகத்தை சேர்ந்தவர்கள் இங்கு வந்து சேர்கிறார்கள் திமுக அதிமுகவிற்கு அரசியல் எதிர்காலமே கிடையாது. சுய லாபத்திற்காக இரண்டு பேரும் இணைந்து பயணிக்க தயாராக இருக்கும் காரணத்தால் இரண்டு தலைமை மீது நம்பிக்கை இழந்து மாற்றுக்கட்சியிலிருந்து வந்து தமிழக வெற்றி கழகத்தில் இணைந்து வருகின்றனர். அவர்களுக்கு தேவையான மரியாதை அங்கீகாரம் கொடுக்கப்படும்.

திமுக கூட்டணியில் இடம் பெற்றவர்கள் அழைத்து தவெக அரசு அமைச்சரவையில் இடம் கொடுத்திருப்பது நியாயம் என்றால் எந்த கூட்டணியும் நியாயம் தான் டிடிவி தினகரன் கூறியது கொடுத்த கேள்விக்கு:

இந்த பிரச்சனை எங்கிருந்து வந்தது என்று சொல்கிறேன்.எடப்பாடியும் ஸ்டாலினும் எப்போது சேர்ந்து பயணிக்க முடிவு செய்தார்களோ அதுதான் இந்த பிரச்சனை தொடங்கியது. டிடிவி தினகரன் எதற்கு கட்சி தொடங்கினார் எடப்பாடி காலி செய்ய வேண்டும் துரோகி எடப்பாடி துரோகி பன்னீர்செல்வம் என்று சொல்லி தான் கட்சியை தொடங்கினார். ஒன்பது ஆண்டு பன்னீர் செல்வத்தை துரோகி என்று சொல்லி விட்டு அவரை முதல்வராக அவர் ஒரே எம்எல்ஏவை கவர்னர் மாளிகைக்கு அழைத்து சென்றார். அவர் பேசலாமா இது நியாயமா. அவருடன் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் பயணித்தனர் இன்று அவர்களை நடுத்தெருவில் நிற்கிறார்கள்.

எடப்பாடியும் ஸ்டாலினும் ஒன்றாக சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று மக்கள் கொடுத்த தீர்ப்பா எங்கள் தலைவர் முதல்வராக வேண்டும் என்று தான் மக்கள் தீர்ப்பு கொடுத்தார்கள். மக்களை ஏமாற்ற இவர்கள் நடந்து கொண்டதால் தான் அந்த கூட்டணியில் இருந்து நேர்மையாகபயணிக்கமுடியாமல்வெளியே வந்தனர். இதை அவர்களாலே மறுத்து பேச முடியவில்லை.

ஸ்டாலினை காதர் மைதீன் உள்ளிட்டவர்களுக்கு போன் செய்து எடப்பாடி முதல்வராக வேண்டும் என்று சொன்னார்கள் இதை விட கேவலமான அரசியல் எங்கு உள்ளது. அண்ணன் டிடிவி எல்லாம் புரியும் அவர் காலத்திற்கு ஏற்றார் போல தண்ணி போவது போல் வளைந்து வளைந்து போகிறார். அவரின் போதாத காலம் யாரை எதிர்த்து கட்சி தொடங்கினாரோ அந்த எடப்பாடி முதல்வராக்க கவர்னர் மாளிகை போல் நின்றார். அவருக்கான மரியாதையை பொதுத்தளத்தில் இழுந்து விட்டார் கொஞ்ச நாள் அவர் பேசாமல் இருந்தால் இருக்க மரியாதையை தக்க வைத்துக் கொள்ளலாம்.

அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முதலிடம் மத்திய அரசு உத்தரவு குறித்த கேள்விக்கு:

தமிழகத்தில்என்னபின்பற்றுகிறோமோ அதைத்தான்பின்பற்ற போறோம் மேற்கு வங்கத்தில் பதவியேற்பு விழாவில் போது அந்த மாநில பாடல் தான் முதலில் ஒழிக்கப்பட்டது. தமிழகத்தில் நமக்கென்று ஒரு வழிகாட்டுதல் உள்ளது அதன்படி தான் செயல்படுவோம் அதில் மாற்றுக்கருத்து இல்லை தமிழ் தாய் வாழ்த்து தான் முதலில் பாடப்படும்.

ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயர்ந்தவர்களுக்கு அரசு பணி கொடுப்பீர்களா என்ற கேள்விக்கு:

எந்தெந்த நேரத்தில் எதை செய்ய வேண்டும் என முதல்வர் ஆலோசித்து செய்வார்கள் பல இடங்களில் இது போல துரோகங்கள் நடைபெற்று உள்ளது. ஸ்டெர்லைட் குறித்து பேசிய திமுக அதிகாரிகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கரூர்உயிரிழந்தசம்பவம்பணி ஆணை வழங்கியதில்எதிர்க்கட்சிகள்விமர்சனம் குறித்த கேள்விக்கு:

கரூர் உயிரிழப்பு மிகப்பெரிய சதியின் வேலைப்பாடு. கட்சியின் சார்பாக அவர்களுக்கு உதவி செய்யப்பட்டது. சதி திட்டத்தால் நிகழ்த்தப்பட்டது இதை யாரும் மறக்க மாட்டோம். இடைத்தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை ஒட்டுமொத்த கட்சியும் எப்போது வேண்டுமானாலும் தேர்தலை சந்திக்க தயாராக உள்ளோம் மக்களின் ஆதரவு உள்ளது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.